**<u>In the Court of the District Munsif, Eraniel</u>**

**Original Suit No. 41/2024** **Date:19.01.2026.**

**(PW1)-** பால்தாஸ்

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. நான் இந்த வழக்கை A பட்டிகை சொத்திற்கு வழி பாதை வேண்டி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். A பட்டிகை சொத்தில் ஒரு வீடு உள்ளது என்றால் சரிதான். மேற்படி வீடு யாருக்கு உரிமைப்பட்டது என்றால் என்னுடைய வீடாகும். மேற்படி வீடு எவ்வளவு விஸ்தீரணம் என்றால் 6 ¾ சென்ட் ஆகும். மேற்படி வீடு அமைந்துள்ள சொத்தானது 2 சர்வே எண் சொத்தில் அமைந்துள்ளது என்றால் சரிதான். ஆனால் நான் வழக்கில் ஒரு சர்வே எண்ணை தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

2. எனது வீட்டிற்கு முன்பு செல்லக்கூடிய சாலை அமைக்கப்பட்டு எத்தனை வருடங்கள் இருக்கும் என்றால் சுமார் 20 வருடங்கள் இருக்கும். அதற்கு முன்பு அங்கு சாலை இல்லையென்றால் சரிதான், ஓடை சென்று கொண்டிருந்தது. மேற்படி ரோடு வருவதற்கு முன்பு வேறு பாதை வழியாக சென்று கொண்டிருந்தோம் என்றால் சரியல்ல, ஓடை வழியாக தான் தபசில் A பட்டிகை சொத்தை அடைவோம். தபசில் B பட்டிகை சொத்து யாருக்கு உரிமைப்பட்டது என்றால் எனது பெரியப்பாவின் மகன் சாமுவேலுக்கு பாத்தியப்பட்டதாகும். நான் வீடு கட்டும் சமயத்தில் அதற்கு தேவையான பொருட்களை எடுத்து செல்லும் லாரி முதலிய வாகனங்கள் செல்ல பாதை இல்லாததால் பிரதிவாதியிடம் B பட்டிகை சொத்தில் கொண்டு செல்ல அனுமதி கேட்டேன் என்றால் சரியல்ல.

3. எனது வீட்டு வேலை முடிந்த பிறகு நானே வழி பாதையை கேட் அமைத்து அடைத்து விட்டு நீதிமன்றத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல . புதிய சர்வே எண் 400/6 ல் எனக்கு எவ்வளவு சொத்து பாகம் படி பாத்தியப்பட்டது என்றால் 24 சென்ட் சொத்து பாத்தியப்பட்டது. மேற்படி புதிய சர்வே எண் 400/6 ல் உள்ள சொத்தை எனது பிள்ளைகளுக்கு எழுதி கொடுத்தேன் என்றால் 6 ¾ சென்ட் சொத்தை எனது மகனுக்குஎழுதி கொடுத்துள்ளேன். எனது மகனுக்கு எழுதி கொடுத்த சொத்திற்கு வேறு பாதை உள்ளது என்றால சரியல்ல, பட்டிகை சொத்தை தான் பாதையாக பயன்படுத்தி வருகிறார்.

4. வழக்கு பட்டிகை சொத்திற்கு செல்வதற்கு எனக்கு வேறு வழீ பாதை உள்ளது என்றாலும் நான் பிரதிவாதிகளின் சொத்தை அபகரிக்க வேண்டி கெட்ட எண்ணத்தில் பொய்யான சங்கதிகளை கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.